# Carnival (Session 3)

**2K Aadu | J4K Kids Camp**





ஹலோ! வாங்க! வாங்க! இன்னிக்கு எனக்கு பிறந்தநாள்-னு எப்படி தெரிஞ்சுது?

நீங்களும் என் பிறந்தநாள் கொண்டாட வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. என் பிறந்தநாள் கேக் பாருங்க - Special ஆடு கேக். உயர்ந்த பேப்பர்ல செஞ்சிருக்காங்க. ஒரு இரகசிய செய்தி என் கேக்ல வச்சிருக்காங்களாமாம். வாங்க அது என்னனு கண்டுபிடிக்கலாம்.

<முதல் தாளைத் எடுக்கவும்>



என்ன என் குடும்ப படம் வருது - ஓ... இயேசப்பா எனக்கு நல்ல குடும்பம் தந்திருக்காங்கனு சொல்லுது. அது ரொம்ப உண்மை தான். என் இரண்டாவது அண்ணன் மட்டும் தான் எனக்கு பிடிக்காது, மற்றபடி ஒகே தான்!

அடுத்தது என் நண்பர்கள் படம்லாம் வருது - இது என்னவா இருக்கும்? உங்களுக்கு புரிஞ்சுதா? (ஓ.. இயேசப்பா நல்ல நண்பர்களை கொடுத்தத சொல்லுது)

இங்க பாருங்க, அடுத்தது கண்ணு, காது, மூக்கு எல்லாம் வருது - இயேசப்பா நமக்கு தேவையானதெல்லாம் கொடுத்து படைச்சிருக்காருன்னு சொல்லுது போல.

Yay!!! என் படம் வருதே - இயேசப்பா என்ன படைச்சாருன்னு சொல்லுது போல. "இயேசப்பா என்ன படைத்ததிற்கு ரொம்ப நன்றி!"

வாங்க Friends, இந்த கேக் நல்லா பாருங்க. இயேசப்பா படைச்ச விஷயங்கலாம் இருக்கு. உங்களுககு எது ரொம்ப பிடிச்சிருக்குனனு சொல்லுங்க. (அவர்கள் தேர்ந்தெடுத்ததை ஏன் விரும்புகிறார்கள் என்று சிறுவர்களிடம் கேளுங்கள்)



பிரன்ட்ஸ் நம்ம கேக்குடைய இரகசியம் கண்டுபிடிச்சிடோம்! நீங்க யாராச்சு சொல்ல முடியுமா? (சிறுவர்கள் பதில் சொல்லட்டும்)
இயேசப்பா தான் நம்மை படைச்சிருக்காரு. அழகாக படைச்சாரு. நல்லவங்களா படைச்சாரு. வாங்க உங்களல போல ஒரு குட்டி ஆடு செய்லாம்!
(பின்பு, ஆடு கைவினை பொருள் செய்ய உதவுங்கள். அதில் அவர்கள் பெயரை எழுத சொல்லுங்கள்)

(சிறுவர்களை ஸ்டிக்கர் கொடுத்து அடுத்த டெண்டுக்கு அனுப்புங்கள். அவர்கள் வேல்யுயே செல்லும்போது காகித கேக்கை மெல்லுவது போல் செயல்படுங்கள்)



(அழுவது போல் செயல்படுங்கள்) **ஈஈஈஈஈஈஈன்ன்ன்ன ஈன்ன்ன்ன ஈன்ன்ன்ன பாாாா பாாா பாா ஈஈன்ன்ன்**

வாங்க, பிரன்ட்ஸ். என் அழரான்னு பாக்கிறீங்களா?

இயேசப்பா செய்யாதன்னு சொன்னதை செஞ்சுட்டேன் பிரன்ட்ஸ். என்ன பண்னேன் தெரியுமா - என் பிரன்டுகிட்ட போய் சொல்லிடேன், என் அம்மா மேல கோவப்பட்டுடேன், ரொம்ப நாள்லா பைபிள் வாசிக்கவே இல்ல. இப்போ மனசுல ரொம்ப கஷ்டமா இருக்கு. நீங்க இப்படி Feel பன்னிருக்கிங்களா? (சிறுவர்கள் பதில் கூறட்டும்) என் மனசு எவ்வளவு அழுக்கா சந்தோஷமே இல்லாம இருக்கு பாத்தீங்களா? (கருப்புப் பெட்டிக்குள் பார்க்கச் சொல்லுங்கள்)

ஒரு சந்தோஷமே இல்ல பிரன்ட்ஸ். ஏதோஒன்னு தொலைச்சிட்ட மாதிரி இருக்கு. தப்பு என்னை தேவனை விட்டு பிரிச்சிருச்சுபோல. தேவன் இல்லாததுனால தான் இப்படி சோகமா இருக்கேனா. இந்தாங்க இந்த ஸ்டிக்கரை எடுத்துக்கோங்க. மற்ற டெண்டுக்கு பொய் என்னக்கு ஒரு தீர்வு கண்டுபிச்சிட்டு வந்து சொல்லுங் ப்ளீஸ்.






தேவையானவை - லேப்டாப் ⸫ ஸ்மார்ட் போன், டிஜிடல் படம்

(ஒரு காபி கடையில் உட்கார்ந்து கணினியில் கடினமாக வேலை செய்வது போல் காட்டுங்கள்) ம்.... ஒ.... ம்ம்ம்ம்.. ம்ம்ம்ம்



வாங்க பிரன்ட்ஸ், காபி கடையில (Cafe -ல) என்ன பண்ணறேன்னு பாக்கிறீங்களா? ஒரு பெரிய பிரச்சனை. எப்படி சரி பண்ணறதுன்னு யோசிச்சிக்கிட்ருக்கிறேன்.

பிரச்சனையை சொல்லறதுக்க முன்னாடி, வாங்க உங்களுக்கும் சாப்பிட எதாவது வாங்கி தாறேன்.
(பணியாள் அழைக்கிறார்) எக்ஸ்கியுஸ்மி சார், என் பிரன்ட்ஸ்-க்கும் நான் சாப்பிடறதை சாப்பிளை பண்ணுங்க பிலிஸ். (அன்றைக்குரிய சிநாக்ஸ் சிறுவர்களுக்கு பகிரவும்)

என் ஸ்கிரீனை பாருங்கள். தப்பு செய்தவங்களுக்கு தண்டனை இருக்காம். இந்த உலகத்திற்கு பிறகு, நித்திய நித்தியமா தேவன் இல்லாதது ஒரு இடத்திற்கு நம்ம போவோமாம். தப்பே செய்யாதவங்க யாராவது இங்கே இருக்கிறோமா? நான் ஒரு பட்டியல் போட்டுப்பார்த்தேன் ஒரு நாளைக்கு 3 தப்புன்னா கணக்குபோட்டா இதுவரைக்கும் நான் 10950 தவறுக்ள் 10 வருஷத்துலா செய்திருக்கேன். தண்டனை நம்ம எல்லாருக்குமே நிச்சயம்.

இதவிடவும் ஒரு பெரிய பிரச்சனை சொல்லவா? நம்மை படைத்த தேவன் நீதியுள்ளவர். நல்ல நியாயதிபதி மாதிரி அவர் தப்புக்கு தண்டனை கொடுத்தேதான் ஆகணும். இன்னொரு பக்கம் அவர் ரொம்ப அன்பானவர், நமக்கு தண்டனை தர விரும்பல.

அவருக்கு இருக்கிற பிரச்சனைய பார்த்தீங்களா?

இந்த இரண்டு பிரச்சனையும் சரி பண்ண உங்களுக்கு ஏதாவது ஐடியா தோனுதா நண்பர்களே?



(பிள்ளைகளை சிறிய குழுக்களாகப் பிரித்து, இரண்டு பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும்படி அவர்களிடம் கூறவும். சிறுவர்களுக்கு ஸ்டிக்கர் கொடுத்து அனுப்புங்கள்)



தேவையானவை- ஆடியோ, சிட் டெம்ப்ளேட், ஐஸ்கிரீம் ஸ்டிக் கிராஸ் (https://youtu.be/-K3dZqo9c-A?si=Rz2Msi6a8zqHjh0x), கண்ணாடியுடன் கூடிய ஷூபாக்ஸ்.



சீக்கிரமா வாங்க வாங்க இயேசப்பாவை கூட்டிக்கிட்டு போறாங்க. அவர் ஒரு தப்பும் செய்யல ஆனா ஏன் அவர சிலுவையில அறைய போறாங்க என்னன்னு தெரியலையே.

வாங்க நம்ம பின்னாடியே போய் பார்ப்போம்!

ஐயோ அவரை சாட்டையலா அடிக்கிறாங்க, தப்புதப்பா பேசுறாங்க, முட்கீரிடம் போட்டிருக்காங்க, எவ்வளவு வலிச்சுருக்கும்.



இயேசப்பா கடவுள் தானா? சுலபமாக தப்பிச்சிருக்கலாமே. ஏன் அவர் அவ்வளவு அடி வாங்குன்னருன்னு தெரியல அய்யோ சிலுவையில அறைஞ்சிட்டுங்கா.

இயேசப்பாவை எதுக்காக சிலுவையில அறைஞ்சாங்க? அவர் யாருக்காக மரித்தார்? இந்த மேஜிக் பாக்ஸ்-ல பதிலும் இருக்கும். நல்லா திறந்து பாருங்க!

(போஸுல் இருக்கும் கண்ணாடி அவர்கள் முகத்தைக் காட்டும்)

பதில் கண்டுபிடிச்சுடோம்! இயேசப்பா உங்களுக்காகவும், எனக்காகவும் தான் மரிச்சாரு. ஏதற்கு தெரியுமா? நம்ம செய்த தப்பு நம்ம தண்டனை வாங்கிற்கணும், ஆனா தேவனை நம்மால ரொம்ப நேசித்ததுனாலா, அவரே மனுஷனாகி, நம்ம அடிக்கபடவேண்டிய இடத்தில அவர் அடிக்கப்பட்டார்.



வாங்க எல்லாரும் சேர்ந்து சிலுவை செய்யலாம்!

(ஐஸ்கிரீம் குச்சியை பயன்படுத்தி சிலுவை செய்ய உதவுங்கள்)

(சிறுவர்களுக்கு ஸ்டிக்கர் கொடுத்து அனுப்புங்கள்)



நண்பர்களே!! ஒரு நல்ல செய்தி!! இயேசப்பா சிலுவையில மரிச்சாரு? 3 நாலுல நான் உயிரோடு வருவேன்னு சொன்னாருல! சொன்னமாரியே மூன்றாவது நாள் உயிரோடு வந்துட்டாரு!!

ஓ ஹோ ஹோ!

உயிர்த்தெழுந்த இயேசப்பா உங்களுக்கும் எனக்கும் நல்ல மேய்ப்பனா இருக்க விரும்புறாரு. நீங்க அவர் ஆடுகளா இருக்க விரும்புறீங்களா?

நீங்க அவர் ஆடாகமுடியுமான்னு டெஸ்ட் பண்ண போறேன்.

*புரட்டுவதற்கு எளிதான மற்றும் தலையில் அணியக்கூடிய குறிச்சொல்லை உருவாக்கவும். குறிச்சொல்லின் ஒரு பக்கத்தில் "நல்லது" என்று எழுதவும், மறுபுறம் "கெட்டது (கூஷயன)" என்று எழுதவும். குறிச்சொல்லை நீங்களே அணியுங்கள். சிறுவர்களை ஒரு வட்டத்தில் நிற்க வைத்து அவர்களுடன் நிற்கவும்.*

*கைதட்டல், குதித்தல், திரும்புதல் போன்ற பல்வேறு செயல்களை ஒன்றன் பின் ஒன்றாக செய்யுங்கள். உங்கள் குறிச்சொல் "நல்லது" என்பதைக் காட்டினால், சிறுவர்கள் உங்கள் செயல்களைப் பின்பற்ற வேண்டும். உங்கள் குறிச்சொல்லை "கெட்டது(கூஷயன) " என்று அவ்வப்போது புரட்டி, செயல்களைத் தொடரவும். நீங்கள் "கெட்டது (கூஷயன)" காட்டும்போது அவர்கள் உங்களைப் பின்தொடர்ந்தால், அவர்களை அவர்களின் இடத்தில் உட்காரச் சொல்லுங்கள். ஆட்டம் முடியும் வரை நிற்கும் சிறுவர்கள் வெற்றியாளர்கள்.*

இயேசுவின் ஆடுகள் ஒவொரு நாளும் இயேசப்பா சொல்வதைக் கேட்டு நடப்பாங்க. ஒரே நாளிலே ஓடி போயிரமாட்டாங். நீங்க இயேசுவின் ஆடா?

நீங்க நல்லா விளையாடுனீங்க பதில் சொன்னீங்க. அதுனால உங்களுக்கு ஒரு ஸ்டிக்கர். என்னால ஒரு ஸ்டிக்கர் மட்டும் தான் கொடுக்க முடியும் ஆனா இயேசப்பா உங்களுக்கு சூப்பரா ஒன்றை ரெடியாகிட்டுருக்காரு! என்னனு தெரியுமா? அடுத்த டெண்டுக்கு பொய் பாருங்க! Bye!








தேவையானவை: மஞ்சள் அட்டை, பைபிள், சொர்க்கம் போன்ற அலங்காரம்

**வராரு! வராரு! வராரு! வராரு! வராரு! பாரு!**

**யாருன்னு கேட்குறீங்களா பிரன்ட்ஸ்? இயேசப்பா, நம்ம நல்ல மேய்ப்பன் வர போராரு! அவர் ஆடுகளெல்லாம் ஒரு சூப்பரானா இடத்துக்கு கூட்டிட்டு போக வராரு!**

**வேதத்திலே வெளிப்படுத்தின விஷேஷம் 20, 21நாம் அதிகராதில்ல போட்டுருக்கு. நீங்க கண்டுபிடிச்சத இந்த சார்ட்ல எழுதுங் (special campers - வரையுங்க) பார்ப்போம்!**

சிறுவர்களை இரண்டு குழுக்களாக பிரிக்கவும். ஒரு குழுவிடம் பரலோகத்தில் உள்ளதை எழுதச் சொல்லுங்கள், மற்றொரு குழுவை இல்லாததை எழுத சொல்லுங்கள்.

*(சிறுவர்களுக்கு ஸ்டிக்கர் கொடுத்து அனுப்புங்கள்)*

